## மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை

முன்னிலை திரு.G. நாகராஜன். பி.ஏ.,பி எல்.,
அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை
2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை,

**அமர்வு வழக்கு எண்.53/2021**

(மேலூர் காவல் நிலைய குற்ற எண்.249/2012)

**(CNR.No.TNMD01-000511-2021)**

| | | |
|---|---|---|
| 1. குற்றமுறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர், மேலூர் காவல் நிலையம், மதுரை. |
| 2. எதிரியின் பெயர் | : | 1. பழனி, த/பெ.பழனியப்பன், தும்பைப்பட்டி, மேலூர் வட்டம்.<br>2. சின்னக்கருப்பாயி, க/பெ.வெள்ளத்துரை, தும்பைப்பட்டி.<br>3. வெள்ளத்துரை, த/பெ.சின்னக்கருப்பன், தும்பைப்பட்டி.<br>4. மீனாள், க/பெ.பாலமுருகன், தும்பைப்பட்டி. |
| 3. எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் | : | 1 வது எதிரியின் மீது பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை) மற்றும் 304(B) இதச, 2 முதல் 4 வரையான எதிரிகளின் மீது பிரிவு 498(A), 302 r/w. 34 மற்றும் 304(B) இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| 4. எதிரிகளின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 5. நீதிமன்றத்தின் முடிவு | : | குற்றவாளி அல்ல |
| 6. நீதிமன்றத்தின் தீர்ப்பு | : | முடிவில், 1 வது எதிரியின் மீதான பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை) மற்றும் 304(B) இதச மற்றும் 2 முதல் 4 வரையான எதிரிகளின் மீதான பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு |

நிரூபிக்கப்படாததால், 1 வது எதிரி பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை) மற்றும் 304(B) இதசவின் கீழும், 2 முதல் 4 வது எதிரிகள் பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வழக்கில் அரசு தரப்பில் ஆர்.பி.ஆர்.எண்.45/2025 ல் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருட்களை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

1 முதல் 4 வது எதிரிகள் கொடுத்த பிணை முறி ஆணையானது மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் ரத்து செய்யப்படுகிறது.

7. அரசு தரப்பு வழக்கறிஞர் : திருமதி.J.காவேரி சாந்தி, சிறப்பு அரசு வழக்கறிஞர்

8. எதிரிதரப்பு வழக்கறிஞர் : திரு.J. வேலாயுதம்

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர் :
1. பழனி, த/பெ.பழனியப்பன்
2. சின்னக்கருப்பாயி, க/பெ.வெள்ளத்துரை
3. வெள்ளத்துரை, த/பெ.சின்னக்கருப்பன்
4. மீனாள், க/பெ.பாலமுருகன்

புகார்தாரரின் பெயர் : காவல் ஆய்வாளர், மேலூர் காவல் நிலையம், குற்ற எண்.249/2012

| வ. எண் | குற்றம் சாட்டப்பட்டவர் காவலில் இருந்த காலம் | காவலில் வைத்த நாள் | பிணையில் விடப்பட்ட நாள் | சிறையில் இருந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | பழனி, த/பெ.பழனியப்பன் | 30.03.2012 | 23.05.2012 | 55 நாட்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சின்னக்கருப்பாயி, க/பெ.வெள்ளத்துரை | --- | 22.05.2012 | முன் ஜாமீன் |
| | வெள்ளத்துரை, த/பெ.சின்னக்கருப்பன் | --- | 23.05.2012 | முன் ஜாமீன் |
| | மீனாள், க/பெ.பாலமுருகன் | --- | 22.05.2012 | முன் ஜாமீன் |
| 2. | புகார் கொடுத்த தேதி | 27.03.2012 | | |
| 3. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான தேதி | 28.11.2018 | | |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | 30.07.2021 | | |
| 5. | பல்வகை மனுக்கள் | தாக்கல் தேதி | தீர்வு தேதி | |
| | | --- | --- | |
| 6. | சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்த தேதி | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி | |
| | அ.சா.1 துரைராஜ் | 28.04.2025 | 28.04.2025 | |
| | அ.சா.2 செல்வம் | 03.06.2025 | 03.06.2025 | |
| | அ.சா.3 அழகன் | 13.06.2025 | 13.06.2025 | |
| | அ.சா.4 மணிரத்னம் | 07.08.2025 | 07.08.2025 | |
| 7. | குற்றம் சாட்டப்பட்டவரை கு.வி.மு.ச.பிரிவு 313 ன்கீழ் கேள்வி கேட்ட தேதி | 09.03.2026 | | |
| 8. | எதிரி தலைமறைவான விவரம் மற்றும் வாரண்டில் பிடித்த அல்லது சரண்டரான தேதி | பிடி கட்டளை பிறப்பிக்கப்பட்ட நாள் | பிடி கட்டளை திரும்பப் பெறப்பட்ட நாள் | |
| | | --- | --- | |
| 9. | மேலமை நீதிமன்றத்தின் தடை ஏதேனும் இருப்பின் அதன் விவரம் | --- | --- | |

இந்த வழக்கானது 09.03.2026ம் தேதி என் முன் இறுதியாக விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில் திருமதி.J.காவேரி சாந்தி, சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.J. வேலாயுதம், வழக்கறிஞர் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களையும் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பு</u>**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

1. இவ்வழக்கின் வாதி தற்கொலை செய்து இறந்துபோன விஜயாவின் தந்தை மற்றும் இறந்த போன பிரியதர்சினி வாதியின் மகள்வழி பேத்தி ஆவார். இவ்வழக்கின் 1வது எதிரி பழனிக்கும், வாதியின் மகளான விஜயாவிற்கும் கடந்த 01.09.2008ம் தேதி திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது விஜயாவின் பெற்றோர் 10 பவுன் தங்க நகைகள், பண்ட பாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்து திருமணம் செய்து வைத்ததாகவும், வழக்கு சம்பவ சமயத்தில் அவர்களுக்கு பிரியதர்சினி என்ற பெண் குழந்தையும், 6 மாத ஆண் குழந்தையும் இருந்ததாகவும், அதன் பின்பு விஜயாவும் 1வது எதிரியும் சுமார் 6 மாத காலமாக மாமனார், மாமியாருடன் கூட்டுக்குடும்பமாக குடியிருந்து வந்ததாகவும், அதன் பின்பு 3வது எதிரியின் வீட்டின் அருகில் தனி வீடு பிடித்து தனிக்குடித்தனம் இருந்ததாகவும், 1வது எதிரி விஜயாவிடம் மேலும், பணம், நகை வாங்கி வரும்படி அடித்து துன்புறுத்தியதாகவும், 1வது எதிரி 4வது எதிரியை வைத்துக்கொண்டு அவரது தூண்டுதலின் பேரில், அடிக்கடி அடித்து துன்புறுத்தி வந்ததாகவும், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் விஜயாவிடம் மேலும் நகை பணம் வாங்கி வரும்படி கொடுமைபடுத்தியதாகவும், 26.03.2012ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு 1வது எதிரி விஜயாவிடம் தாலி, தோடு, மூக்குத்தியை கழட்டி கொடுக்கும்படி கேட்டபோது, விஜயா கொடுக்க மறுத்ததால், 1வது எதிரி விஜயாவை அடித்து துன்புறுத்தி, நான் மேலூர் சென்று வருவதற்குள் செத்துவிடு என்று கூறியதாகவும், 1வது எதிரி பகல் சுமார் 12.00 மணிக்கு வீட்டிற்கு வந்து விஜயாவை பார்த்து இன்னும் சாகவில்லையா எனக் கேட்டதாகவும், வரதட்சணை கேட்டு 2 முதல் 4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் விஜயாவை அடித்து துன்புறுத்தியதால் மனம் வெறுத்து, வீட்டிலிருந்த

மண்ணெண்ணெய்யை விஜயா தனது உடம்பில் ஊற்றி தீ வைத்ததாகவும், அதனைப் பார்த்த பிரியதர்சினி ஓடி வந்து விஜயாவைக் கட்டிப்பிடித்ததால் இருவருக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டதாகவும், இருவரையும் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 27.03.2013 ம் தேதி நள்ளிரவு 12.00 மணிக்கு தீக்காயங்களினால் பிரிய தர்சினி இறந்ததாகவும், 28.03.2012 ம் தேதி காலை 06.30 மணிக்கு தீக்காயங்களினால் விஜயா இறந்து போனதாகவும், 1 முதல் 4 வரையிலான எதிரிகளின் மீது பிரிவு 304(B0, 498(A) r/w.34 இதசவின் கீழான குற்றம் புரிந்துள்ளனர் என மேலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் எதிரிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இந்த வழக்கானது, முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.48/2018 ஆக கற்றறிந்த நீதித்துறை நடுவர், மேலூர் அவர்களால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி முன்னிலைபட்டவுடன், குவிமுச 207 வது பிரிவின்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு, இவ்வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்க குற்றம் என்பதனால், மேல்விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச 209(அ) பிரிவின் படி அனுப்பப்பட்டு, 18.01.2021-ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.53/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் இறந்துபோன நபர் பெண் என்பதால், விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன், அரசு தரப்பில் ஆஜரான அரசு சிறப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகளின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், 1 வது எதிரியின் மீது பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை), 304(B) இதச, 2 முதல் 4 வரையான எதிரிகளின் மீது பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து 1 முதல் 4 வரையான எதிரிகளுக்கு எடுத்துக் கூறி வினவியபோது எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்தனர்.

**3.** எனவே, இவ்வழக்கில் 1 முதல் 4 எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும்பொருட்டு அரசு தரப்பில் பட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்த 17 சாட்சிகளில், 4 சாட்சிகள் மட்டும் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில்

அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற தரப்பில் நீமசாஆ.1 முதல் நீமசாஆ.3 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சாட்சிப் பொருட்களாக அசாபொ.1 மற்றும் அசாபொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சி சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறிய வரும் அரசு தரப்பு வழக்கானது ::**

**(i)** அ.சா.1 திரு.துரைராஜ் இவ்வழக்கின் வாதி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை. 1வது எதிரி அசா.1ன் மருமகன், 2, 3 எதிரிகள் 1வது எதிரியின் பெற்றோர், 4வது எதிரி 1வது எதிரியின் அண்ணன் மனைவி. அசா.1ன் மகள் விஜயாவை 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்து, ஒரு பெண், ஒரு ஆண் குழந்தை உள்ளனர். அசா1.ன் மகள் விஜயாவும், பேத்தி பிரியதர்சினியும் எதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி இறந்துவிட்டார்கள் என்று அசா.1க்குத் தெரியாது. அசா.1 மேலூருக்கு வேலைக்கு சென்றுவிட்டார். அசா.1ன் மகள் விஜயாவை 1வது எதிரிக்கு 8 ½ பவுன் நகை போட்டு, பண்டபாத்திர சீர்வரிசைகள் கொடுத்து திருமணம் செய்து கொடுத்தனர். அசா.1ன் மகள் திருமணத்திற்கு பின்னர் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார், அசா.1ன் மகளுக்கு பிரியதர்ஷினி என்ற மகளும், யாசித் என்ற மகனும் உள்ளனர். அசா.1ன் மகளுக்கு அடிக்கடி வயிற்று வலி வந்து கொண்டிருந்தது, அசா.1ம் கூறினார். அசா.1ம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். 26.03.2012ம் தேதி அசா.1 வழக்கம் போல எலக்ட்ரீசியன் வேலைக்கு மேலூருக்கு வந்தபோது, அசா.1ன் மகள் தீ வைத்துக்கொண்டதாக போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில், அசா.1 மேலூரிலிருந்து அசா.1ன் மகளைப் பார்க்க போய்க்கொண்டிருந்தபோதே ஆம்புலன்சில் அசா.1ன் மகளை வந்தார்கள், அசா.1ம் ஆம்புன்சில் அவரது மகளுடன் சென்றார். அசா.1ன் மகளும், பேத்தியும் பேசினார்கள். அசா.1ன் மகளிடம் கேட்டபோது, வயிற்றுவலி அதிகமாக இருந்ததால் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டதாகவும், அதைப் பார்த்து அசா.1ன் பேத்தி காப்பாற்றச் சென்றதில் அசா.1ன் பேத்திக்கும் தீக்காயம் ஏற்பட்டதாக கூறினார். மேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லச் சொன்னார்கள். 26.03.2012ம் தேதி அசா.1ன் பேத்தி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மறுநாள் 27.03.2012ம்

தேதி அசா.1ன் பேத்தி இறந்துவிட்டதாக காவல்நிலையத்தில் கூறினார். அசா.1ம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் அசா.1ன் உடையதுதான். அதை யார் எழுதினார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றும் அசா.1க்குத் தெரியாது. புகார் மனுவிலுள்ள அசா.1ன் கையொப்பம் மட்டும் அதசாஆ.1.

**(ii)** அசா.2 திரு.செல்வம். அசா.2க்கு எதிரிகளைத் தெரியும், அனைவரும் அசா.2ன் உறவினர்கள். இறந்தவருக்கும் அவரது குழந்தைக்கும் எவ்வாறு தீக்காயம் ஏற்பட்டது என்று அசா.2க்குத் தெரியாது, இருவரையும் ஆம்புலன்சில் அனுப்பி வைத்தார்.

**(iii)** அசா.3 திரு.அழகன் வெளியூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டார். விஜயாவிற்கும் அவரது குழந்தைக்கும் எவ்வாறு தீக்காயம் ஏற்பட்டது என்று அசா.3க்குத் தெரியாது. அவர்கள் இருவரும் மருத்துமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக கேள்விபட்டு சென்று பார்த்தார். வேறு எந்த விபரமும் அசா.3க்குத் தெரியாது.

**(iv)** அசா.4 திரு.மணிரத்தினம், கோவை மாட்டம், நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து, கடந்த மே மாதம் 2017ம் ஆண்டு பணிஓய்வு பெற்று, நாமக்கல்லில் வசித்து வருகிறார். கடந்த 2012ம் ஆண்டு அசா.4 மதுரை மாவட்டம், மேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, 27.03.2012ம் தேதி காலை 09.15 மணிக்கு மேலூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, தும்பப்பட்டியைச் சேர்ந்த அசா.1 திரு.துரைராஜ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அதசாஆ.2 புகார் மனுவைப் பெற்று, நிலைய குற்ற எண்.249/2012 பிரிவு 174 குவிமுசவாக வழக்கு பதிவு செய்து, இந்த வழக்கில் தீக்காயங்கள் ஏற்படுத்திக் கொண்டு இறந்து போன விஜயா என்பவர் திருமணமாகி 4 வருடங்களே ஆகியுள்ளதால், வழக்கின் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து வருவாய் கோட்டாட்சியருக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் வழக்கின் ஒரு நகலை பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி அவர்கள் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27.03.2012ம் தேதி காலை 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அலாவுதீன் மற்றும் கபிபுல்லா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, அதசாஆ.4 பார்வை மகஜர், அதசாஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பம் பெற்று, மேற்படி

சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காலை 10.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து, அசாபொ.1 கனரக வாகனங்களுக்கு ஊற்றக்கூடிய GULF, 5 லிட்டர் ஆயில் கேன் ஒன்று, அசாபொ.2 Vorion என்ற குவாட்டர் ரம் பாட்டிலில் தயாரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று ஆகியவற்றை மேற்படி அதே சாட்சிகளின் முன்னிலையில் அதசாஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளின் கையொப்பம் பெற்று, கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அதசாஆ.7 படிவம் 95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் போட்டோ (1 எண்ணம்) அதசாஆ.8.

27.03.2012ம் தேதி காலை 11.45 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து, இவ்வழக்கில் இறந்துபோன 3 வயது பெண் குழந்தை பிரியதர்ஷினியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில், விசாரணை செய்து அதசாஆ.9 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, சாட்சி அசா.2 ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் தீக்காயங்களால் இறந்து போன விஜயா என்பவர் திருமணமாகி 4 வருடங்களில் வரதட்சணை கொடுமையால் இறந்துள்ளதாக அதசாஆ.10 மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் முதல்நிலை அறிக்கையின் அடிப்படையில், மேல் விசாரணைக்காக வரப்பெற்ற மேற்படி வழக்குக் கோப்பை மேலூர் வட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராகிய அசா.4 தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வருவாய் கோட்டாட்சியர் திரு.துரைராஜன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிஹவ செய்துள்ளார். வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் வாக்குமூலங்கள் அதசாஆ.11. வருவாய் கோட்டாட்சியரின் இறுதி அறிக்கை அதசாஆ.12. சம்பவ இடம் சென்று பார்வையிட்டபோது, அது ஏற்கனவே முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் அவர்கள் தயார் செய்திருந்த பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் உள்ளது போலவே சரியாக இருந்ததால், அசா.4 தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. 28.03.2012ம் தேதி சாட்சி அசா.2 விசாரணை செய்து மறுவாக்குமூலமும், அசா.2, துரைராஜ் மகன் செல்வம், கண்ணன், அசா.3 ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலமும் பதிவு செய்துள்ளார்.

29.03.2012ம் தேதி சாட்சிகள் சசர் அலி, கிருஷ்ணன் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 30.03.2012ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 174 குவிமுசவில் இருந்து பிரிவு 304(B) இதசவாக பிரிவு மாறுதல் செய்து, அதசாஆ.13 பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளைத் தேடி வந்த நிலையில், 30.03.2012ம் தேதி 16.00 மணிக்கு தும்பப்பட்டி பேருந்து நிலையத்தில் இருந்த 1 வது எதிரி பழனிப்பன் என்பவரைக் காரணம் கூறி கைது செய்து, 16.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, திரேகப் பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் 2 முதல் 4 எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். 20.04.2012ம் தேதி இறந்துபோன சிறுமி பிரியதர்ஷினியின் பிரேதத்தைப் பிரேத பரிசோதனை செய்து, அதசாஆ.14 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர் திரு.அலாவுதீன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, தலைமை காவலர் திரு.கண்ணனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 30.08.2012ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன விஜயாவின் பிரேதத்தைப் பிரேத பரிசோதனை செய்து, அதசாஆ.15 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர்கள் திரு.நடராஜன், திரு.சிவராமசுப்பிரமணியன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காவலர் திரு.ராஜதேவன், பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் விஜயா அனுமதிக்கப்பட்டதற்கான விபத்துப்பதிவேடு நகல் நீமசாஆ.1, மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் பதிவு செய்யப்பட்ட விஜயாவின் மரண வாக்குமூலம் நீமசாஆ.2, தீக்காயம்பட்ட விஜயாவின் இறப்பை உறுதி செய்த Death report நீமசாஆ.3. அசா.4ன் விசாரணையில் இருந்தும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் 1 முதல் 4 வரையிலான எதிரிகளின் மீது குற்றத்திற்கான ஆக்கக் கூறுகள் காணப்பட்டதால் வழக்கின் புலன் விசாரணையை முடித்து, எதிரிகளின் மீது பிரிவுகள் 498(A), 304(B) இதசவுடன் இணைந்த பிரிவு 34ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் 1 முதல் 4 வரையான எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிகளுக்கு எடுத்துக்கூறி கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன்கீழ் விசாரிக்கப்பட்டபோது 1 முதல் 4 வரையான எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என மறுத்தனர். 1 முதல் 4 வரையான எதிரிகள் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் கூறினர். எனவே எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. பிரச்சினை

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், 1 வது எதிரியின் மீதான பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை), 304(B) இதச, 2 முதல் 4 வரையான எதிரிகளின் மீதான பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

தீர்வு :

**8.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தை முன்னிலைப்படுத்தும்போது 1 முதல் 4 வரையான எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள், தொடர்புடைய சான்றாவணங்கள் மற்றும் புலன்விசாரணை மூலமாக இந்நீதிமன்றம் உளநிறைவு அடையத்தக்க வகையில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே 1 முதல் 4 வரையான எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

**9.** இதற்கு மாறாக கற்றறிந்த 1 முதல் 4 வது எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தை முன்னிலைப்படுத்தும்போது, அரசு தரப்பு முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்கள் அரசு தரப்பு வழக்கை வலுப்படுத்துவதாக இல்லை என்றும், விசாரிக்கப்பட்ட சாட்சியங்களில் எதிரிகளையும், குற்றச்சாட்டுக்களையும் இணைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏதும் தெரிய வரவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சாட்சியங்களின் மூலமும், ஆவணங்களின் மூலமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எதிரிகள் அந்த குற்றத்தை செய்யவில்லை என்று அ.சா.1 ன் சாட்சியத்தின் மூலம் மாறுபாடாக மெய்ப்பித்துள்ளார். எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை முகாந்திரமே இல்லை

என்றும் எனவே எதிரிகளை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

**10.** இந்த வழக்கானது, 1வது எதிரி பழனிக்கும், வாதியின் மகளான விஜயாவிற்கும் கடந்த 01.09.2008ம் தேதி திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது விஜயாவின் பெற்றோர் 10 பவுன் தங்க நகைகள், பண்ட பாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்து திருமணம் செய்து வைத்ததாகவும், வழக்கு சம்பவ சமயத்தில் அவர்களுக்கு பிரியதர்சினி என்ற பெண் குழந்தையும், 6 மாத ஆண் குழந்தையும் இருந்ததாகவும், அதன் பின்பு விஜயாவும் 1வது எதிரியும் சுமார் 6 மாத காலமாக மாமனார், மாமியாருடன் கூட்டுக்குடும்பமாக குடியிருந்து வந்ததாகவும், அதன் பின்பு 3வது எதிரியின் வீட்டின் அருகில் தனி வீடு பிடித்து தனிக்குடித்தனம் இருந்ததாகவும், 1வது எதிரி விஜயாவிடம் மேலும், பணம், நகை வாங்கி வரும்படி அடித்து துன்புறுத்தியதாகவும், 1வது எதிரி 4வது எதிரியை வைத்துக்கொண்டு அவரது தூண்டுதலின் பேரில், அடிக்கடி அடித்து துன்புறுத்தி வந்ததாகவும், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் விஜயாவிடம் மேலும் நகை பணம் வாங்கி வரும்படி கொடுமைபடுத்தியதாகவும், 26.03.2012ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு 1வது எதிரி விஜயாவிடம் தாலி, தோடு, மூக்குத்தியை கழட்டி கொடுக்கும்படி கேட்டபோது, விஜயா கொடுக்க மறுத்ததால், 1வது எதிரி விஜயாவை அடித்து துன்புறுத்தி, நான் மேலூர் சென்று வருவதற்குள் செத்துவிடு என்று கூறியதாகவும், 1வது எதிரி பகல் சுமார் 12.00 மணிக்கு வீட்டிற்கு வந்து விஜயாவை பார்த்து இன்னும் சாகவில்லையா எனக் கேட்டதாகவும், வரதட்சணை கேட்டு 2 முதல் 4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் விஜயாவை அடித்து துன்புறுத்தியதால் மனம் வெறுத்து, வீட்டிலிருந்த மண்ணெண்ணையை விஜயா தனது உடம்பில் ஊற்றி தீ வைத்ததாகவும், அதனைப் பார்த்த பிரியதர்சினி ஓடி வந்து விஜயாவைக் கட்டிப்பிடித்ததால் இருவருக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டதாகவும், இருவரையும் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 27.03.2013 ம் தேதி நள்ளிரவு 12.00 மணிக்கு தீக்காயங்களினால் பிரிய தர்சினி இறந்ததாகவும், 28.03.2012ம் தேதி காலை 06.30 மணிக்கு தீக்காயங்களினால் விஜயா இறந்து போனதாகவும், 1 முதல் 4 வரையிலான எதிரிகளின் மீது பிரிவு 304(B0, 498(A) r/w.34 இதசவின் கீழான குற்றம் புரிந்துள்ளனர்

என மேலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களால் எதிரிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் 17 சாட்சிகளில், இவ்வழக்கின் வாதி அ.சா.1, கண்ணுற்ற சாட்சியமான அ.சா.2, கேள்வியுற்ற சாட்சியமான அ.சா.3 ஆகிய சாட்சியங்கள் அரசு தரப்பையொட்டி சாட்சியம் அளிக்காத நிலையில், அரசு உதவி வழக்குரைஞரால் ஏனைய சாட்சிகள் விலக்கப்பட்டு, இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை பிறழ்சாட்சியாக பாவிப்பதற்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கின்றனர்.

**11.** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியைத் தவிர, எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை பொறுத்து வேறு எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. இவ்வழக்கின் வாதி அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 புகாரை ஒப்புக்கொள்ளவில்லை. புகாரில் உள்ள அவரது கையொப்பத்தை மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளார். அசா.1 எதிரிகள் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால், தன் மகள் தற்கொலை செய்து கொண்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக தன் மகளுக்கு வயிற்று வலி வந்து கொண்டிருந்ததாகவும், தன்னிடம் கூறியதாகவும், தானும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், 26.03.2012ம் தேதி தான் வழக்கம் போல எலக்ட்ரீசியன் வேலைக்கு மேலூருக்கு வந்தபோது தன் மகள் தீ வைத்துக்கொண்டதாக போன் மூலம் தகவல் சொன்னதாகவும், தான் மேலூரில் இருந்து தன் மகளைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்த போதே ஆம்புலன்சில் தன் மகளைக் கொண்டு வந்ததாகவும், ஆம்புலன்சில் தானும் தன் மகளுடன் சென்றதாகவும், தன் மகளும் பேத்தியும் பேசியதாகவும், தன் மகளிடம் கேட்டபோது, வயிற்று வலி அதிகமாக இருந்ததால் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டதாகவும், அதைப் பார்த்து தன் பேத்தி காப்பாற்றச் சென்றதில் தன் பேத்திக்கும் தீக்காயம் ஏற்பட்டதாக கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அசா.2ம் தனது சாட்சியத்தில் இறந்தவருக்கும் அவரது குழந்தைக்கும் எவ்வாறு தீக்காயம் ஏற்பட்டதென்று தனக்குத் தெரியாது என்றும், அவர்கள் இருவரையும் ஆம்புலன்சில் அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம்

அளித்துள்ளார். கேள்வியுற்ற சாட்சியமான அசா.3ம் விஜயாவிற்கும் அவரது குழந்தைக்கும் எவ்வாறு தீக்காயம் ஏற்பட்டது என்று தனக்குத் தெரியாது என்றும், அவர்கள் இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டு சென்று பார்த்ததாகவும், வேறு எந்த விபரமும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகளை குற்றச்சாட்டுக்களுடன் பிணைக்கத்தக்க சாட்சியங்கள் இல்லை. இவ்வழக்கின் வாதியான இறந்து போன பெண்ணின் தந்தையும் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது அரசு தரப்பை ஒத்துரைத்து சா ட்சியம் அளிக்கவில்லை.

**12.** இவ்வழக்கின் புகார்தாரரான அசா.1 புகாரில் உள்ள தனது கையொப்பத்தை மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1, எதிரிகள் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால், தனது மகள் தற்கொலை செய்து கொண்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையுள்ள சாட்சியங்கள் பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அ.சா.4 ஆன புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து, புலன் விசாரணை மேற்கொண்ட விதம் மட்டுமே புலனாகிறது. அதசாஆ.14 மற்றும் அதசாஆ.15ன் மூலமாக இறந்தவர் தீக்காயங்களினால் இறந்ததாக நிரூபிக்கப்பட்டிருந்தாலும், எதிரிகள் தான் காரணம் என்று நிரூபிக்கப்படவில்லை. எதிரிகளை குற்றச்சாட்டுகளுடன் பிணைக்கத்தக்க சாட்சியங்கள் இல்லை. எதிரிகளின் மீது உள்ள குற்றச்சாட்டுகளை தகுந்த வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் அரசு தரப்பில் கூறப்படுவது போல் தான் சம்பவம் நடைபெற்றது என்பதற்கு தகுந்த சாட்சியங்கள் இல்லை. எனவே, 1வது எதிரியின் மீதான பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை), 304(B) இதச, 2 முதல் 4வது எதிரிகளின் மீதான பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சாட்சியங்களின் மூலமும், ஆவணங்களின் மூலமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. மாறாக, 1 முதல் 4 வரையான எதிரிகள் அந்த குற்றத்தை செய்யவில்லை என்று அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் மாறுபாடாக மெய்ப்பித்துள்ளார். எனவே, அந்த சந்தேகத்தின் பலனை அடைய 2 முதல் 4வது எதிரிகள் தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அந்த சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 வரையான எதிரிகளுக்கு அளித்து 1வது எதிரி பிரிவு 498(A), 302 (2

எண்ணிக்கை), 304(B) இதசவின் கீழும், 2 முதல் 4 வது எதிரிகள் பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழும் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில் 1 வது எதிரியின் மீதான பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை), 304(B) இதச, 2 முதல் 4 வரையான எதிரிகளின் மீதான பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழான அரசு தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் 1 வது எதிரி பிரிவு 498(A), 302 (2 எண்ணிக்கை), 304(B) இதச, 2 முதல் 4 வது எதிரிகள் மீதான பிரிவு 498(A), 302 r/w. 34, 304(B) இதசவின் கீழான குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து 1 முதல் 4 வரையான எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வழக்கில் அரசு தரப்பில் ஆர்.பி.ஆர்.எண்.45/2025 ல் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருட்களை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

1 முதல் 4 வரையான எதிரிகள் கொடுத்த பிணை முறி ஆணையானது மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் ரத்து செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் அவர்களிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் திங்கட்கிழமையாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.03.16 15:24:17 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம்,
மதுரை.

**<u>பின் இணைப்பு :</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் ::</u>**

அ.சா.1 துரைராஜ்

அ.சா.2 செல்வம்

அ.சா.3 அழகன்

அ.சா.4 மணிரத்னம்

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> : இல்லை**

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| அ.த.சாஆ.1 | 27.03.2012 | புகார் மனுவில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் |
| அ.த.சாஆ.2 | 27.03.2012 | புகார் மனு |
| அ.த.சாஆ.3 | 27.03.2012 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சாஆ.4 | 27.03.2012 | பார்வை மகஜர் |
| அ.த.சாஆ.5 | 27.03.2012 | மாதிரி வரைபடம் |
| அ.த.சாஆ.6 | 27.03.2012 | அத்தாட்சி |
| அ.த.சாஆ.7 | 26.03.2012 | படிவம் 95 |
| அ.த.சாஆ.8 | --- | கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் போட்டோ (1 எண்ணம்) |
| அ.த.சாஆ.9 | 14.09.2012 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சாஆ.10 | 28.03.2012 | வருவாய் கோட்டாட்சியரின் முதல்நிலை அறிக்கை |
| அ.த.சாஆ.11 | 28.03.2012 | வருவாய் கோட்டாட்சியரின் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் வாக்குமூலங்கள் |
| அ.த.சாஆ.12 | 14.09.2012 | வருவாய் கோட்டாட்சியரின் இறுதி அறிக்கை |
| அ.த.சாஆ.13 | 30.03.2012 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சாஆ.14 | 27.03.2012 | சிறுமி பிரியதர்ஷினியின் பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சாஆ.15 | 28.03.2012 | இறந்து போன விஜயாவின் பிரேத பரிசோதனை அறிக்கை |

**<u>நீதிமன்ற தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 26.03.2012 | மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் விஜயா அனுமதிக்கப்பட்டதற்கான விபத்துப்பதிவேடு |

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.2 | 26.03.2012 | மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் பதிவு செய்யப்பட்ட விஜயாவின் மரண வாக்குமூலம் |
| நீ.ம.சா.ஆ.3 | 28.03.2012 | தீக்காயம்பட்ட விஜயாவின் இறப்பை உறுதி செய்த Death Report |

**எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் :** **இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுப் பொருட்கள்:**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | கனரக வாகனங்களுக்கு ஊற்றக்கூடிய GULF, 5 லிட்டர் ஆயில் கேன் ஒன்று. |
| அ.சா.பொ.2 | Vorion என்ற குவாட்டர் ரம் பாட்டிலில் தயாரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று. |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:** **இல்லை**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.16 15:24:25 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம்,
மதுரை.

மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை
**அமர்வு வழக்கு எண். 53/2021**
தீர்ப்புரை
நாள் : 16.03.2026